| S–6226 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2025**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. 'கனவு' என்பது எப்பெயரில் வெளியானது? இதனை எழுதியவர் யார்?

2. உதாரனை அமுதவல்லியிடம் எவ்வாறு அறிமுகம் செய்கின்றனர்?

3. காதலர் வந்த விதத்தை ந. பிச்சமூர்த்தி எவ்வாறு விளக்குகிறார்?

4. 'மின் துளிர்கள்' ஹைக்கூ கவிதையில் ஏதேனும் ஒன்றை எழுதுக.

5. அசோகமித்திரன் பற்றிய குறிப்பு எழுதுக.

6. சாப விமோசனத்தின் வழி புதுமைப்பித்தன் குறிப்பிடும் புனைவினைக் குறிப்பிடுக.

7. பாரீசிலிருந்து வந்த கடிதம் வெளிப்படுத்திய செய்தியைக் குறிப்பிடுக.

8. சந்திரஹரி எந்த நாடக வகையைச் சார்ந்தது?

9. அண்ணாவின் 'நல்ல தீர்ப்பு' சொற்பொழிவு எங்கு, எப்போது நிகழ்த்தப்பட்டது?

10. அப்துல் கலாம் பற்றிக் குறிப்பு வரைக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

பின்வருவனவற்றிற்கு **ஒரு பக்க** அளவில் விடையளி.

11. (அ) தந்தையின் வறுமைநிலை பற்றிய பதிவைப் பாரதி எடுத்துக் கூறும் விதத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) நிலவு பற்றிய உதாரனின் வருணனைகளை விளக்குக.

12. (அ) 'ஐந்து பெரிது: ஆறு சிறிது' – கவிதை வெளிப்படுத்தும் உண்மையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மீராவின் 'கூக்கு' கவிதை நடையினைத் தருக

13. (அ) 'அப்பாவின் வேஷ்டி' கதையின் சமூக வெளிப்பாடு விளக்குக.

(அல்லது)

(ஆ) 'வீழ்தல்' கதை உணர்த்தும் பெண்ணியச் சிந்தனையை விளக்குக.

14. (அ) 'செண்டலங்காரர்' எனும் சொல்லுக்கு உ. வே. சா. வின் தேடுதல் அமைந்த விதம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பம்மல் சம்பந்தனாரின் நாடக வாழ்க்கை குறித்து எழுதுக.

15. (அ) 'நல்ல தீர்ப்பு' எனும் உரையின் சாரத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) எஸ். எல். வி. செயற்கைக் கோளின் பின்னனி குறித்த தகவலை அக்னிச் சிறகு நூல்வழிப் பதிவு செய்க.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

16. உதாரன் – அமுதவல்லி வீரவுரையை விவரிக்க.

17. ஈரோடு தமிழன்பனின் கவிதைகள் குறித்து ஆராய்க.

18. 'செல்லாத பணம்' உணர்த்தும் பெண்ணிய மனநிலையைக் கட்டுரைக்க.

19. 'சந்திரஹரி' நாடகத்தின் வழி அங்கதத் தன்மையை விவரிக்க.

20. அண்ணாவின் பொழிவுகளில் உணர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

———————

| S–6227 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C2 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### அற இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.

1. ஐம்பது என முடியும் இரண்டு பதிணெண்கீழ்க்கணக்கு நூல்களை எழுதுக.

2. திருவள்ளுவரின் பிற பெயர்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. இடுக்கண் வரும்போது அதை எப்படி களைய வேண்டும் என நட்பு அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார்?

4. பெற்ற உடம்பை நெடுங்காலம் பேணி வளர்க்கும் வழிமுறை என்ன? என்று வள்ளுவர் மருந்து அதிகாரத்தில் கூறுகிறார்.

5. மம்மர் அறுக்கும் மருந்து என எதனை நாலடியார் கூறுகிறது?

6. சூரிய வெப்பம் பட்டவுடன் புல்லில் பட்ட பனித்துளி மறைவது போல எது மறைந்து விடும் என நாலடியார் கூறுகிறது?

7. யானை அனையவர் நண்பொரீஇ என நாலடியார் கூறக் காரணம் என்ன?

8. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் கணிமேதாவியார் இயற்றிய இரு நூல்களைக் குறிப்பிடுக.

9. திரிகடுகத்தில் காணலாகும் மருந்து பொருள்களை எழுதுக.

10. "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" - சொல்லுக்கு உறுதியாகும் நாலும் இரண்டும் எது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

பின்வருவனவற்றிற்கு ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) செய்யும் செயற்பாட்டில் மன எழுச்சி உடையவராக இருத்தல் வேண்டும் என்பதை ஊக்கம் உடைமை அதிகாரத்தின் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருளை ஆக்கும் வகை குறித்த செய்திகளைப் பொருள் செயல்வகை அதிகாரம் வழி புலப்படுத்துக.

12. (அ) பெரியோருக்குப் பிழை செய்யாமல் மதித்து நடத்தல் என்ற செய்தியை பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரம் எங்ஙனம் எடுத்துக் கூறுகிறது.

(அல்லது)

(ஆ) திருக்குறளில் மானம் என்ற அதிகாரம் தரும் செய்திகளைப் புலப்படுத்துக.

13. (அ) அழகு குறித்த சிந்தனைகளை நாலடியாரின் கல்வி என்ற அதிகாரம் எங்ஙனம் புலப்படுத்துகின்றது?

(அல்லது)

(ஆ) மேன்மக்கள் குறித்த சிந்தனைகளை நாலடியாரின் மேன்மக்கள் என்ற அதிகாரம் வழிநின்று விளக்குக.

14. (அ) நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல் எவ்வாறு என்பன குறித்த சிந்தனைகளை நாலடியார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றத்தார்களைப் பேணுதல் தொடர்பான செய்திகளை நாலடியாரின் சுற்றந்தழால் அதிகாரம் வழி விளக்குக.

15. (அ) திரிகடுகம் 'நல்ல வினையைக் கட்டித்தரும் கயிறு' என எதனை உரைக்கிறது?

(அல்லது)

(ஆ) இன்னாநாற்பது எவையெல்லாம் துன்பத்தைத் தரும் என கூறுகிறது? விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

கீழ்க்கண்டவற்றுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் விடையளி.

16. ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை அதிகாரங்கள் வழி புலனாகும் கருத்துக்களை ஆய்க.

17. நட்பின் சிறப்பு, நட்பாராய்தல் குறித்த கருத்துக்களைத் திருக்குறள் வழி தொகுத்தெழுதுக.

18. நாலடியார் கூறும் கல்வியின் சிறப்புகள், பயன்கள் குறித்த பதிவுகளைத் தொகுத்தெழுதுக.

19. நாலடியார் நவிலும் விடாமுயற்சி குறித்த கருத்துக்களை விளக்குக.

20. திரிகடுகம், சிறுபஞ்சமூலம் உணர்த்தும் கருத்துகளை ஆய்க.

---

| S–6228 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1C3 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் யார்?

2. ‘அகர’ ‘இகரம்’ எழுத்துப்போலியில் எவ்வெழுத்தாய் பிறக்கும்?

3. இதழ் குவிதலால் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

4. இரண்டு மாத்திரை அளவுடைய உயிர் நெட்டெழுத்துக்கள் யாவை?

5. ஓகாரா ஈற்றிற்கு இடையே வரும் சாரியை எது?

6. சுட்டு முதலாகிய இகர இறுதிக்குச் சான்று தருக.

7. ‘மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே’ - சான்று தருக.

8. மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை - சான்று தருக.

9. கொக்கு - எவ்வகைக் குற்றியலுகரம் ஆகும்?

10. “வண்டும் பெண்டும் இன்னொரு சிவணும்” - விளக்குக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) எழுத்துக்களின் வகைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் சிறப்புப்பாயிர கருத்துக்களை விளக்குக.

12. (அ) வேற்றுமை உருபுகளின் புணர்ச்சிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்துக் சாரியை என்றால் என்ன? விளக்குக.

13. (அ) உயிர் ஈற்றுச் சொற்களின் முன் உருபுகள் புணருமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) மெய் ஈற்றுச் சொற்களின் முன் உருபுகள் எங்ஙனம் புணரும்?

14. (அ) அல்வழியில் 'அ' கர ஈறுடைய பெயர்கள் புணரும் நெறிகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) வேற்றுமையில் 'இ' கர ஈற்றுப்பெயர்கள் புணர்தலை விளக்குக.

15. (அ) குற்றியலுகரத்தின் ஆறு வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) குற்றியலுகரப் சிறப்புப் புணர்ச்சிகளுள் சிலவற்றை எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மொழி முதல், மொழி இறுதியில் நிற்கும் எழுத்துக்களை கட்டுரைக்க.

17. எழுத்துக்களின் பிறப்பினை தொல்காப்பியத்தின் பிறப்பியல் வழி விவரி.

18. உயிர்ஈறு மெய்ஈறுகளின் புணர்ச்சி இலக்கங்களை தொகைமரபு இயலின் வழி விளக்குக.

19. புள்ளி மயங்கியலில் மெய்யீறுகள் புணருமாற்றை ஆராய்க.

20. தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் ஒன்று முதல் ஒன்பது வரை கூறும் புணர்ச்சி இலக்கணத்தை விவரிக்க.

———————

**S–6229**

| Sub. Code |
| --- |
| 23MTA1E1 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் : பக்தி இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் யாவை?

2. காரைக்காலம்மையார் - குறிப்பு வரைக.

3. அடியார்க்கும் அடியவன் யார்? விளக்கம் தருக.

4. மாணிக்கவாசகர் வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை? அவர் இயற்றிய படைப்புகளைக் குறிப்பிடுக.

5. "எம் தம்பிரானார் எழிற் திருமார்வற்குச் சந்தம் அழகிய தாமரைத் தாளர்கு" - யார் கூற்று விளக்கம் தருக.

6. "முடிச்சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ அடிச்சோதி நீ நின்ற தாமரையா யலர்ந்த்துவோ" - என்று பாடியவர் யார்? பொருள் தருக.

7. அருணகிரிநாதர் - குறிப்பு வரைக.

8. தாயுமானவர் தமிழ்ப்பணிகள் குறித்து எழுதுக.

9. வேதநாயகரின் படைப்புகளைக் குறிப்பிடுக.

10. குணங்குடிமஸ்தான் சாகிபுவின் தமிழ்ப்பணிகளைத் தருக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சேரமான் பெருமாள் நாயனாரின் கொடைத்திறத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) "மாண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே" யார் கூற்று? விளக்குக.

12. (அ) "நீள நினைந்தடியேன் உனை நித்தலுங்க கைதொழுவேன்" - என்று பாடியவர் யார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) "முல்லை முறுவலுமை ஒரு பங்குடை முக்கணனே" - யார் கூற்று? விளக்குக.

13. (அ) "மாசுடை உடம்பொடு தலையுலறி வாய்ப்புறம் வெளுத்து ஒரு போது முண்டு" - பொருள் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) "கருப்புவில் மலர்க் கணைக் காமவேளைக் கழலினை பணிந்து அங்கோர் கரியலற" - யார் கூற்று? விளக்குக.

14. (அ) அருணகிரிநாதரின் திருப்புகழ் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) இராமலிங்க அடிகளின் பக்தி நெறியினைத் தருக.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபுவின் 'கொடிகட்டிக் கொண்டெழு' என்னும் தலைப்பில் அமைந்த பாடல் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வேதநாயக சாத்திரியாரின் 'வானம்பூமியோ பராபரன்' என்னும் பாடலின் கருத்துக்களை எடுத்துரைக்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. திருஞானசம்பந்தரின் 'திருவையாற்றும் பதிகம்' எடுத்துரைக்கும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. சுந்தரர் கூறும் திருவெண்ணெய் நல்லூர்பதிகத்தின் சிறப்புகளைப் புலப்படுத்துக

18. ஆண்டாள் கூறும் நாச்சியார் திருமொழி கருத்துக்களை வரைக.

19. தாயுமானவரின் பக்தி நெறியினைப் புலப்படுத்துக

20. வேதநாயகரின் தமிழ்ப்பணிகள் குறித்துக் கட்டுரைக்க.

———————

| S–6230 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1E2 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### First Semester

தமிழ்

விருப்பப்பாடம் — காப்பிய இலக்கியம்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

ஓரிரு வரிகளில் விடையளி.

1. சிலப்பதிகாரத்தில் வரம் தருகாதை எந்தக் காண்டத்தில் எதில் இடம் பெறுகிறது?

2. கண்ணகியின் பார்ப்பணத் தோழி யார்?

3. “ஆங்கவற்கு ஒருநாள் அம்பலபீடிகை பூங்கொடி நல்லாய் !
புகுந்தது கேளாய்” எனக் கூறியவர் யார்? விளக்கம் தருக.

4. சீவக சிந்தாமணி குறிப்பு வரைக.

5. “கண்டனென் கற்பினுக்கு அணியை” - யார் யாரிடம் கூறியது?

6. பெரிய புராணத்தில் இடம்பெறும் காண்டங்களையும் சருக்கங்களின் எண்ணிக்கையையும் எழுதுக.

7. இரட்சணியை யாத்திரிகம்-குறிப்பு வரைக.

8. இரட்சணிய யாத்திரிகக் காப்பியத்தில் எந்தத் தமிழ்க் காப்பியத்தின் செல்வாக்கு அதிகமாக உள்ளது?

9. இசுலாமிய இரட்டைக்காப்பியங்கள் என்றழைக்கப்படும் நூல்களைக் குறிப்பிடுக.

10. சீறாப்புராணத்தில் இடம்பெறும் காண்டங்களைக் குறிப்பிடுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி.

11. (அ) கண்ணகி வஞ்சினம் உரைத்த திறம் யாது?

(அல்லது)

(ஆ) செங்குட்டுவனது முகக்குறிப்பை அறிந்து மாடலன் கூறியதை விளக்குக.

12. (அ) பரப்பு நீரால் பல்வளம் சுரக்க என இந்திரன் மேகங்களை ஏவுவதற்கானக் காரணத்தை பாத்திர மரபு கூறிய காதை வழிநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது தான் தொலைவு இல்லாத் தகைமையது-இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

13. (அ) விசயை சீவகனுக்குக் கூறிய அறவுரைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) சீவகன் விமலை இருவரின் திருமண நிகழ்வை விளக்குக.

14. (அ) இளையான்குடி மாறன் நாயனாருக்கு ஈசன் தந்த சோதனைகளையும் அதை நாயனார் எதிர்கொண்ட திறத்தையும் எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலுவையில் இயேசு மொழிந்த ஏழு திருவசனங்களை விளக்குக.

15. (அ) வானவர் நபிக்கு மொழிந்த மொழிகளை நதிகடந்த படலம் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இரட்சணிய யாத்திரிகம் குறித்த பதிவையும் பார்வையையும் தருக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றிற்கு** மட்டும் விரிவாக விடையளி.

16. வஞ்சினமாலையில் இடம்பெறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

17. பாத்திர மரபு கூறிய காதை தரும் செய்திகளை விளக்கியுரைக்க.

18. இளையான்குடி மாறன் நாயனாரின் பக்தித்திறத்தை ஆய்க.

19. சிலுவைத் திருமொழிகளை விவரிக்க.

20. நதி கடந்த படலம் தரும் செய்திகளை ஆய்ந்துரைக்க.

———————

| S–6232 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1E4 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2025**

**First Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – உரையாசிரியர்கள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. உரைகள் தோன்றுவதற்கு முன்பு இருந்த நடைமுறையைக் குறிப்பிடுக.

2. பாயிரத்தின் வகைகளைச் சுட்டுக.

3. முச்சங்க வரலாற்றைக் கூறும் நூல் குறித்து எழுதுக.

4. "வடநூற் கடலை நிலைகண்டு உணர்ந்தவர்" எனப் போற்றப்படும் உரையாசிரியர் குறித்து எழுதுக.

5. பத்துப்பாட்டு நூல் முழுவதற்கும் உரையெழுதிய பெருமக்கள் யாவர்?

6. திருக்குறளுக்கு உரையெழுதிய முதல் பதின்மர் யாவர்?

7. அடியார்க்கு நல்லார் குறித்து எழுதுக.

8. 'நீலகேசி விருத்தி சமய திவாகரம்' என்பது என்ன?

9. சிவஞான முனிவர் எழுதிய உரைநூல்களைப் பட்டியலிடுக.

10. புறப்பொருள் வெண்பாமாலையின் உரையாசிரியர் குறித்து எழுதுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உரை செய்யும் உதவிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உரைத் திறனாய்வு முறைகள் பற்றித் தொகுத்துரைக்க.

12. (அ) சேனாவரையரின் உரை இயல்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) நச்சினார்க்கினியரின் சீவகசிந்தாமணி உரைநயத்தை விளக்குக.

13. (அ) புறநானூற்றிற்கு எழுந்த உரைத் திறத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாலடியாரின் உரைநயத்தை விவரிக்க.

14. (அ) 'சிவஞான போதம்' உரை பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) அடியார்க்கு நல்லாரின் உரை இயல்பைச் சுட்டுக.

15. (அ) ஆண்டிப் புலவரின் உரைத்திறம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பிரயோக விவேகம் நூலினையும் அதன் உரையையும் குறித்து விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. உரை-திறனாய்வே என்ற கூற்றினைச் சான்றுகளுடன் விவரிக்க.

17. தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரின் உரை திறத்தை ஆராய்க.

18. திருக்குறள் கட்டமைப்பில் உரையாசிரியர்களின் மாறுபாட்டை ஆராய்க.

19. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தின் உரையும் அதன் சிறப்பும் குறித்துத் திறனாய்க.

20. பெருந்தேவனாரின் உரை மரபை விவரிக்க.

———————

| S–6233 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA1S1 |

# M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## First Semester

## தமிழ்

## ஊடகக்கலைத் திறன்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

### பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தகவல் தொடர்பியல் வரையறுக்க.

2. பண்டையக்கால தமிழர்களின் தகவல் தொடர்பியல் கருவிகளைச் சுட்டுக.

3. சித்திர வடிவம் என்றால் என்ன?

4. வானொலி உரையாடலின் முக்கியத்துவம் யாது?

5. செய்தி – வரையரை செய்க.

6. வானொலி செய்தி வடிவங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

7. தொலைக்காட்சியின் பணிகள் யாவை?

8. தொலைக்காட்சி நிகழ்ச்சி பேச்சு வடிவம் அமையும் முறையை எழுதுக.

9. திரைமொழி விளக்கம் தருக.

10. தொலைக்காட்சியின் செய்தி மூலங்கள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) ஊடக விளைவு குறித்த கோட்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஊடகங்களும் சமூகமயமாதலும் குறித்து விளக்கம் தருக.

12. (அ) வானொலி கல்வி நிகழ்ச்சியின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வானொலி நிகழ்ச்சியின் வடிவங்களை எடுத்துரைக்க.

13. (அ) வானொலி செய்தியின் மொழிநடை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வானொலியில் செய்தி, வடிவங்களைத் தொகுத்துரைக்க.

14. (அ) தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் பல்சுவை நிகழ்ச்சிகள் பற்றிக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சியில் நிகழ்ச்சியின் வகைகள் குறித்துப் பட்டியலிடுக.

15. (அ) தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் மெகாதொடர்கள் எழுதும் முறைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சிக்குச் செய்தி நிறுவனங்கள் ஆற்றும் பங்களிப்பை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாகளுக்கு மட்டும் விடையளிக்க.

16. தகவல் தொடர்பு ஊடகம் வெளிப்படுத்தும் மகிழ்வித்தல் பணியை ஆராய்க.

17. பெண்களுக்கான நிகழ்ச்சிகளை வானொலி நிறுவனங்கள் முறைப்படுத்தும் விதத்தை விவரி.

18. வானொலி செய்திப்பிரிவின் தோற்றம் வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

19. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வகைகள் – வடிவங்களை விவரிக்க.

20. நும் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கேற்ற வகையில் வடிவமைக்க.

———————

S–6234

Sub. Code
23MTA2C1

# M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## Second Semester

## தமிழ்

## சமய இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. தருமபுர பதிகம் பாடியவர் யார்?
2. சுந்தரர் பாடல்கள் எத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன?
3. சிறிய திருமடல் என்றால் என்ன?
4. ஆண்டாளின் வேறுபெயர்களைக் கூறுக.
5. கந்தர் அலங்காரத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
6. பிள்ளைச் சிறு விண்ணப்பம் என்பதன் விளக்கம் யாது?
7. வாடாத பூமாலை என்று அழைக்கப்படும் நூல் எது?
8. இயேசு காவியம் எச்சமயத்தைச் சார்ந்தது?
9. உமறுப்புலவர் இயற்றிய நூலின் பெயரைக் கூறுக.
10. நந்தீசர் சதகம் எத்தனைப் பாடல்களைக் கொண்டது?

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) திருநாகேசுவர இறைவனின் பெருமைகளை திருநாவுக்கரசர் எங்ஙனம் போற்றுகின்றார்?

(அல்லது)

(ஆ) சுந்தரர் பாடிய திருமலைப்பாடி பதிகக் கருத்துக்களை விளக்குக.

12\. (அ) திருவேங்கடமலையானின் சிறப்புக்களை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டு பாசுரக் கருத்துக்களை ஆராய்க.

13\. (அ) எந்நாட்கண்ணி எனத் தொடங்கும் தாயுமானவ சுவாமிகளின் பாடற் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) அருணகிரிநாதர் கூறும் முருகப்பெருமானின் தோற்றச் சிறப்பை புலப்படுத்துக.

14\. (அ) திருவருள் திருவந்தாதி கூறும் அன்னையின் அருள் திறத்தைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பிணி தேற்றுப் படலக் கருத்துக்களை மதிப்பிடுக.

15\. (அ) சல்மான் பாரிசுப் படலாம் வரையறுக்க.

(அல்லது)

(ஆ) ஞானரத்தினக் குறவஞ்சி கூறும் செய்திகளைப் புலப்படுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மாணிக்கவாசகரின் அச்சோப்பதிகப் பாடல் கருத்துக்களை ஆய்ந்துரைக்க.

17. திருவாய்மொழி வழி நம்மாழ்வார் கூறும் திருமாலின் பெருமைகளைப் பட்டியலிடுக.

18. பிள்ளைச்சிறு விண்ணப்பமாக இராமலிங்க அடிகள் வேண்டுவனவற்றை விவரிக்க.

19. இயேசுவின் மலைப்பொழிவாக கண்ணதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. நந்தீசர் சதகம் கூறும் சிந்தனைகளைத் தெளிவுபடுத்துக.

———————

| S–6235 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C2 |

# M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## Second Semester

## தமிழ்

## காப்பியமும் புராணமும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. ‘கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்’ விளக்குக.

2. அரங்கிலே ஆடிய மாதவிக்குக் கிடைத்த சிறப்பு யாது?

3. உதயகுமாரன் யானையின் மதம் அழித்த திறத்தை எழுதுக.

4. பளிக்கறையின் இயல்பினை இயம்புக.

5. ‘தோலாமொழித்தேவர்’ குறித்தெழுதுக.

6. எவர் இந்திரராய் பிறக்க வல்லவர்?

7. இராமனைக் கண்ட சூர்பணகையின் ஐயத்தை இயம்புக.

8. கண்ணனும் அருச்சுனனும் வீற்றிருந்த பாங்கினை எடுத்தியம்புக.

9. வீரமாமுனிவர் குறித்தெழுதுக.

10. சாரண பாஸ்கரன் பற்றி எடுத்துரைக்க.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) இந்திர விழா புகார் நகரில் எங்ஙனம் தோற்றம் கொண்டது?

(அல்லது)

(ஆ) மனையறம் படுத்த காதையுள் கண்ணகியைப் புகழ்ந்த கோவலனின் உரைகள் யாவை?

12. (அ) சீவகன் சுரமஞ்சியாரை மணந்த நிகழ்வினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சுதமதி, உதயகுமாரன் உரையாடலின் கருத்தை விவரிக்க.

13. (அ) அபிசந்திரனின் தூதின் விளைவுகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) ‘சூளாமணி’ காப்பியத்தின் அமைப்பினை விளக்கியுரைக்க.

14. (அ) பருவங்களின் வருகை குறித்த வருணனைத் திறனை வில்லிபுத்தூரார் எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) சூர்பணகையின் தோற்றம், செயல் குறித்து விளக்குக.

15. (அ) தாவீது மன்னனின் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தடாகத்தின் தன்மையைப் புனல் ‘விளையாட்டுப்படலம்’ வாயிலாக எடுத்தியம்புக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. கோவலன், மாதவி பிரிந்த சூழலைப் புலப்படுத்துக.

17. உவவனத்தின் அழகையும், சிறப்பினையும் எடுத்துரைக்க.

18. சுரமை நாட்டின் நானில வருணனைகளைத் தொகுத்துரைக்க.

19. ‘நாயன்மார்களுள் இயற்பகை நாயனார்’– கட்டுரைக்க.

20. காப்பிய இலக்கணத்தை நும் பாடப்பகுதி ஒன்றினுள் பொருத்தி எழுதுக.

———————

| S–6236 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2C3 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2025.

### Second Semester

### தமிழ்

### தொல்காப்பியம் – சொல்லதிகாரம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. உயர்திணைக்குரிய பால்களைக் குறிப்பிடுக.

2. பலபொருள் ஒரு சொல்லின் வகைகளை எழுதுக.

3. நான்காம் வேற்றுமையின் இலக்கணம் கூறுக.

4. இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் மயங்கும் இடத்தினை எடுத்தியம்புக.

5. உயிரீறுகள் விளியேற்கும் முறையினை எடுத்தெழுதுக.

6. 'இருபாற்கும் உரித்தே தெரியும் காலை' எனக் குறிப்பிடும் உயர்திணைப் பெயர் எது?

7. வினைச்சொல்லின் பொதுவிலக்கணம் வரைக.

8. 'அம்ம கேட்பிக்கும்' – விளக்கம் தருக.

9. இசைப்பொருளில் வரும் உரிச்சொற்கள் எவை?

10. பெயரெச்சத்திற்குச் சான்று தருக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) திணையின் வகைகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) வழுக்களின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

12. (அ) வேற்றுமை என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத்தில் பதிவு பெறும் ஆகுபெயர்களை விளக்குக.

13. (அ) உயர்திணைப் பெயர்கள் விளியேற்கும் முறையினைச் சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) காரணத்தால் அமையும் உயர்திணைப் பெயர்களை எடுத்துரைக்க.

14. (அ) இடைச்சொல்லின் பொது இயல்பை 'மன்' என்னும் இடைச்சொல்லுடன் பொருத்திக் காட்டுக.

(அல்லது)

(ஆ) 'அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றைத் தெளிவுபடுத்துக.

15. (அ) உரிச்சொற்கள் இன்றைய பயன்பாட்டில் உள்ளன வா? ஆய்க.

(அல்லது)

(ஆ) இரத்தல் பொருளில் வரும் சொற்கள் குறித்து தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றை விரித்தெழுதுக.

## பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. செப்பு, வினா பற்றித் தொல்காப்பியர் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. ஐந்தாம் வேற்றுமையின் இலக்கணத்தையும் அதன் பாகுபாடுகளையும் விளக்கியுரைக்க.

18. தொல்காப்பியரால் சுட்டப்பெறும் அஃறிணைப் பெயர்களை நிரல்படுத்தி விவரி.

19. வினைச்சொற்களின் வகைகளைச் சான்று தந்து விளக்குக.

20. எச்சவியல் குறிப்பிடும் தொகை மொழி குறித்துச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

---

| S–6237 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2025.**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – சமூக நீதி இயக்கங்களும் இலக்கியங்களும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சமூக நீதி வரையறை செய்க.
2. சன்மார்க்க சங்கம் குறிப்பு வரைக.
3. வேதநாயகம் பிள்ளை குறித்து எழுதுக.
4. தன்னாட்சி இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
5. சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்?
6. சுயராஜ்யம் எனது பிறப்புரிமை - யார் கூற்று?
7. சிந்தனைச் சிற்பி எனப் போற்றப்படுபவர் யார்?
8. அம்பேத்கார் தோற்றுவித்த இயக்கம்? ஆண்டு?
9. தீண்டாமை ஒழிப்புச் சட்டம் குறித்து எழுதுக.
10. இந்தி எதிர்ப்பு திராவிட இயக்கங்கள் பற்றி எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) 20-ஆம் நூற்றாண்டு சமூக சீர்திருத்த இயக்கங்களின் தலைவர்கள் இருவர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சமயம் கடந்த வள்ளலாரின் நெறிகள் குறித்து ஆய்க.

12. (அ) கிறிஸ்தவர்களின் சமயப் பணிக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சமூக சீர்திருத்தங்களில் நீதிக்கட்சியின் பங்களிப்பினை விவரிக்க.

13. (அ) தோழர் சிங்கார வேலர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மாதர் விடுதலையும் மொழி பிரச்சனையும் குறித்து ஆய்க.

14. (அ) 'மறுமலர்ச்சி' என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) சாதிய எதிர்ப்பில் காந்தியடிகளின் பங்களிப்பினைப் புலப்படுத்துக.

15. (அ) இந்திய அரசியல் சாசனம் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) திராவிட ஆட்சியின் சமூக நீதி குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இராமலிங்க அடிகளாரின் சீர்திருத்தச் சிந்தனைகளை கட்டுரை வடிவில் எழுதுக.

17. அன்னிபெசன்ட் அம்மையார் ஆற்றிய அரும்பணிகளை விளக்குக.

18. சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை விவரிக்க.

19. காந்தியின் சுதந்திரக் கருத்தாக்கங்களை எடுத்தியம்புக.

20. சமூக மாற்றத்திற்கு சீர்திருத்த இயக்கங்கள் ஆற்றிய அரும்பணிகளைக் கட்டுரைக்க.

———————

| S–6238 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E2 |

# M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## Second Semester

## தமிழ்

## விருப்பப்பாடம் – தமிழ் அழகியல்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. அழகியல் இலக்கணம் தருக.

2. அழகு என்பதன் வேறுபெயர்கள் யாவை?

3. புலனுணர்வு இயங்குதிறன் என்றால் என்ன?

4. பண்பாடு என்பதன் பொருள் யாது?

5. கூற்றுநிலை விளக்கம் தருக.

6. புறநானூறு குறிப்பு வரைக.

7. தொல்காப்பியம் கூறும் பாவகைகள் எவை?

8. 'இறைச்சி' என்பதன் பொருள் யாது?

9. 'கால அடையாளம்' – விளக்குக.

10. 'வண்ணம்' குறிப்பு எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) அழகியல் தன்மையை அறிமுகப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கலைஞனின் அழகியல் பார்வை எத்தகையது? விளக்குக.

12. (அ) புலன் உணர்வு இயங்குதிறன் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) அழகியலில் ஒருங்கிணைப்புக் கோட்பாடு குறித்து மதிப்பிடுக.

13. (அ) சங்ககாலக் கவிதைகளின் தனித்தன்மைகளைத் திறனாய்க.

(அல்லது)

(ஆ) மொழிசார் கூறுகள் தொல்காப்பியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதத்தை ஆய்க.

14. (அ) இறைச்சி, உள்ளுறை வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) இலக்கியங்களில் கூற்றுநிலை பெறுமிடத்தைப் புலப்படுத்துக.

15. (அ) படிமம் – குறியீடு வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அழகியலைத் திட்டமிடுதலை விவரிக்க.

## பகுதி இ

(3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. இலக்கியத்தில் கலை சார்ந்த கூறுகளையும், கலையில் இலக்கியம் சார்ந்த கூறுகளையும் தொகுத்து உரைக்க.

17. பாணர் புலவர் பண்பாட்டு மரபு குறித்துக் கட்டுரை வரைக.

18. சங்க இலக்கியங்களின் செவ்வியல் பண்புகளை அழகியல் நோக்கில் ஆராய்க.

19. அகம் புறம் பாகுபாடுகளில் அழகியலைக் கற்பது குறித்து மதிப்பிடுக.

20. இலக்கியத்திற்கும் நுண்கலைகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் கண்டறிக.

| S–6239 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – உலக இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கிரேக்கக் காப்பியங்கள் இரண்டினைச் சுட்டுக.

2. காப்பியம் என்பது எம்மொழிச் சொல்? இதன் வேர்ச்சொல் எது?

3. நாடகம் பிரித்து எழுதி விளக்குக.

4. "கவிதை" என்பதற்கு இலக்கணம் யாது?

5. சிறுகதைக்கு கெட்விக் கூறும் இலக்கணம் யாது?

6. தமிழில் தோன்றிய முதலிரு நாவல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

7. 'செகாவ்' எனும் சிறுகதை ஆசிரியர் எத்தேசத்தைச் சார்ந்தவர்?

8. எஸ். இராமகிருஷ்ணன் எழுதிய கவிதை நூல் யாது?

9. 'மீள முடியுமா' எனும் நாடகத்தை எழுதிய ஆசிரியர் பற்றி எழுதுக.

10. உலகப் புகழ்பெற்ற இரண்டு நாவல்களை எழுத்தெழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கிரேக்க, இலத்தின் காப்பியங்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிதையியல் என்றால் என்ன? விளக்கம் தருக.

12. (அ) நாடகத்தின் செவ்வியல் காலம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சமகால உலகக் கவிதைகள் யாவை?

13. (அ) ஷேக்ஸ்பியரின் ஹேம்லெட் எத்தகைய கதைப்பொருண்மையுடையது?

(அல்லது)

(ஆ) மண்ட்டோ சிறுகதைகள் யாவை?

14. (அ) உலகச் சிறுகதையின் தோற்றத்தைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நாவல்களின் வளர்ச்சி நிலைகளைப் பட்டியலிடுக.

15. (அ) கவிதையின் பாடுபொருள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நவீனக் கவிதைகள் எத்தகைய தலைப்புகளில் அமைந்திருக்கிறது என்பதை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. உலக நாவல் இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரி.

17. உலகச் சிறுகதையின் தோற்றம் – வளர்ச்சி – விவரி.

18. உலகக் காப்பியங்கள் ஓர் அறிமுகம் – எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

19. நாடக போக்குகள் குறித்து விளக்கமாக விவரி.

20. உலகக் கவிதைகள் – வளர்ச்சியை நூற்றாண்டு அடிப்படையில் வரிசைப்படுத்தி விவரி.

———————

| S–6240 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2E4 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

### Second Semester

### தமிழ்

### விருப்பப்பாடம் – இலக்கியமும் தொன்மமும்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. தொன்மம் என்றால் என்ன?

2. தொன்ம வகைகள் இரண்டினைக் கூறுக.

3. புராணங்கள் குறிப்பு வரைக.

4. பழ மரபுக் கதைகளின் அமைப்பு குறித்து எழுதுக.

5. சிலட்டில் கண்ணகி குறித்த தொன்மக் கதைகளை கூறுக.

6. தொன்மத்தின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

7. தொன்மத்தின் தேவை குறித்து இயம்புக.

8. சைவ சமயத் தொன்மக் கதைகள் இரண்டினைக் கூறுக.

9. நாட்டார் தெய்வ வழிப்பாட்டில் கூறப்படும் தொன்மக் கதைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

10. திருமால் குறித்த தொன்மச் செய்திகளைக் கூறுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) தொல்காப்பிய புறத்திணையியலில் காணப்படும் தொல் தமிழரின் பண்பாட்டினை விவரி.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் சுட்டும் சமய வாழ்க்கையினைக் கட்டுரைக்க.

12. (அ) புராணக் கூறுகள் காலந்தோறும் வளர்ச்சியடைந்த நிலையினைத் இயம்புக.

(அல்லது)

(ஆ) இறைமைக் கதைகளுக்கும் பரம்பரைக் கதைகளுக்குமான வேறுபாட்டினை பகுப்பாய்க.

13. (அ) இலக்கியங்களில் காணலாகும் பெண் தெய் வழிபாடுகளை பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழரின் தொன்மம் சார்ந்த நம்பிக்கைள் குறித்து விளக்குக.

14. (அ) நடுகல் வழிபாட்டின் வழியாக வெளிப்படும் தொன்மச் செய்திகளை வரையறு.

(அல்லது)

(ஆ) தொன்மத்தின் வழி நீ அறியலாகும் தமிழர்களின் வழிபாடுகள் குறித்து எழுதுக.

15. (அ) தொன்ம வரலாற்றின் வழி புலனாகும் சமயப் பிண்ணனி குறித்து ஆய்க.

(அல்லது)

(ஆ) தொன்மத்தின் வழி உருவாக்கிய இலக்கிய கூறுகளைப் பட்டியலிடுக.

பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளி.

16. உலக இலக்கியங்கள் மக்களின் பண்பாடு கலாசாரத்தை தொன்மம் மூலம் வெளிப்படுத்துகின்றன. இக்கூற்றை ஆராய்க.

17. தமிழின் தொன்மக்களுக்கும் இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பை விவரி.

18. தொன்மத்தின் வழி அறியலாகும் நிலவியல் கூறுகளை விவரிக்க.

19. தொன்மம் சார்ந்த ஆய்வுக் களங்களை கட்டுரைக்க.

20. நாட்டுப்புற இலக்கியங்கள் பெரும்பாலும் தொன்மக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனவா? ஆய்க.

———————

| S–6241 |
|---|

| Sub. Code |
|---|
| 23MTA2S1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2025**

**Second Semester**

**தமிழ்**

**இதழியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                                   Maximum : 75 Marks

**பகுதி அ**                    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. 'திராவிடன் ' இதழ் குறித்து எழுதுக.

2. 'துக்ளக்' இதழ் குறித்துக் கூறுக.

3. இதழ்களின் நடத்தையறங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. 'செய்தி' விளக்கம் தருக.

5. இந்தியாவில் முதல் பேசும் படம் குறித்தியம்புக.

6. மக்களாட்சியின் நான்கு தூண்களாக உருவகப்படுத்தப்படுவை எவை ?

7. 'கையெழுத்துப் பத்திரிகைகள்' குறித்து விளக்குக.

8. பெட்டிச் செய்திகளின் உட்பொருளினை எடுத்தியம்புக.

9. 'நச்சு இதழ்கள்' விளக்கம் தருக.

10. கீழ்க்காணும் கலைச் சொற்களுக்கு விளக்கம் தருக.

(அ) Yellow Journalism

(ஆ) Fake.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) உமக்குத் தெரிந்த பழைய இதழ்கள் சிலவற்றை நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) அறிஞர் அண்ணாவின் இதழ் பணிகளை எடுத்துரைக்க.

12. (அ) செய்தித்தாளின் நிர்வாக அமைப்பின் பணிகளைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) முகப்பு என்றால் என்ன? முகப்பின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

13. (அ) பத்திரிகைகளின் பணிகள் குறித்து விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) இதழியல் விதிகளைப் புலப்படுத்துக.

14. (அ) விளம்பரங்களின் நிறை குறை பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) விளம்பரத்தின் நோக்கத்தினை எடுத்தியம்புக.

15. (அ) தகவல் தொடர்பு சாதனங்களுள் பத்திரிகை பெறுமிடத்தினைத் திறனாய்க.

(அல்லது)

(ஆ) காலத்திற்கேற்ற தொழில்நுட்பத்திற்கேற்ப பத்திரிகைகள் முன்னேறியுள்ளனவா? ஆய்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. திராவிட இயக்க இதழ்கள் குறித்துக் கட்டுரைக்க.

17. செய்தியாளரின் பண்புகளையும், செய்தி சேகரிப்பில் பின்பற்ற வேண்டிய முறைகளையும் தொகுத்துரைக்க.

18. பத்திரிகைகளின் பொறுப்பும் கடமைகளும் பற்றி எடுத்துரைக்க.

19. கருத்துப்படங்கள் இலச்சினை குறித்து விவரித்தெழுதுக.

20. செய்திபரப்புவதில் பத்திரிகைகளின் எழுச்சி, வீழ்ச்சியினைப் புலப்படுத்துக.

———————

**S–6242**

| Sub. Code |
|---|
| **23MTA2S2** |

# M.A. DEGREE EXAMINATION, APRIL 2025

## Second Semester

## தமிழ்

## தமிழும் அறிவியல் சிந்தனைகளும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. திரிகடுகம் - நூற் குறிப்பு வரைக.

2. தொல்காப்பியர் கூறும்பெரும் பொழுதின் பாகுபாடுகளைக் கூறுக.

3. மழையின் அவசித்தை வள்ளுவர் எங்கனம் உரைக்கிறார்?

4. வானியல் - சொற்பொருள் விளக்கம் தருக.

5. பண்பாட்டுச் சூழலியல் என்றால் என்ன?

6. கோள்களின் இயக்கங்கள் தொடர்பான அறிவினை சங்க கால மக்கள் பெற்றிருந்ததற்கு சான்று தருக.

7. மனோ தத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? ஏன்?

